WILD FOREST FOUNDATION
wild-forest.org

பக்கங்கள்: 05

# தீம்புனல்

THEEMPUNAL

மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:46 | 05.01.2024 வெள்ளிக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053




# காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தலைவி கைது



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வவுனியாவுக்கு இன்று விஜயம் செய்த போது அவரைச் சந்திப்பதற்குச் செல்ல முற்பட்ட காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தலைவி சி.ஜெனிற்றாவும் இன்னொரு பெண்ணும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற வன்னி மாவட்டங்களிற்கான ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் ஜனாதிபதி கலந்துகொண்ட போது வடகிழக்கு வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்காக நிகழ்வு இடம்பெற்ற மண்டபத்திற்குள் செல்ல முற்பட்டனர். அவர்களைத் தடுத்து நிறுத்திய பொலிஸார் ஜனாதிபதியை சந்திப்பதற்கு அனைவருக்கும் அனுமதி வழங்க முடியாது என்றும் ஒருவருக்கு மாத்திரம் அனுமதி வழங்கமுடியும் என்றும் தெரிவித்தனர். இதனை மறுத்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அனைவரையும் அனுமதிக்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

இதனையடுத்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றா பொலிஸாரால் குண்டுக்கட்டாக தூக்கிச்செல்லப்பட்டு வாகனத்தில் ஏற்றப்பட்டு கைது செய்யப்பட்டார். அவருடன் மற்றொரு பெண்ணும் கைது செய்யப்பட்டார்.

இன்று கைதுசெய்யப்பட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றாவுக்கு இன்றையதினம் போராட்டம் எதனையும் முன்னெடுப்பதற்கு நீதவான் நீதிமன்றம் ஏற்கெனவே தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிவில் சமூக பிரதிநிதிகளை சந்தித்த ஜனாதிபதி



சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் நேற்று (04) மாலை நடைபெற்றது.

அங்கு ஜனாதிபதி உரையாற்றுகையில்,

“மாகாண மட்டத்தில் வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானது என்பதால் அவற்றில் மத்திய அரசாங்கம் தலையிடாது.

அதேபோல், அதிகாரப் பகிர்வு என்பது ஒரு அரசியல் எண்ணக்கருவாக மாத்திரம் அன்றி, பொருளாதார அடிப்படையிலும் யதார்த்தமாக அமைய வேண்டும்.

மேலும், 2019 ஆம் ஆண்டு உயிர்த்தஞாயிறு தாக்குதல் மற்றும் 2020 ஆம் ஆண்டு கொவிட் தொற்று காரணமாக நாட்டின் பொருளாதாரம் பெரும் சரிவை சந்தித்தது. அந்த நெருக்கடியான காலத்தைக் கடந்து 2023 ஆம் ஆண்டில் ஓளரவு பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் இயலுமை எமக்கு கிட்டியது. குறிப்பாக 2023 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் முன்னேற்றகரமான வளர்ச்சியை காண முடிந்தது.

இவ்வாறு நாம் முன்னோக்கிச் செல்ல முடியும் என்பதோடு இந்த இரு வருடங்களும் நாட்டின் பொருளாதாரத்தை நிலைப்படுத்தும் வருடங்களாகும்.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காகவே, இந்த வருடத்தில் வற் வரியை அதிகரிக்க நேரிட்டது. போதியளவு வருமானம் உள்ள பொருளாதாரம் ஒன்று எமக்கு அவசியம்.

அதேபோல் நாம் வரவு செலவுத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். எமது தேவைகளுக்காகவும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்” என்றார்.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோருடன் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பல சிவில் சமூகத்தின் அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

# ஜனவரியில் பாராளுமன்றம் ஒத்திவைப்பு

ரணில் விக்கிரமசிங்க ஜனவரி 27 ஆம் திகதி பாராளுமன்றத்தை ஒத்திவைக்கவும் பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திர தின கொண்டாட்டத்தின் பின்னர் புதிய அமர்விற்கு பாராளுமன்றம் கூட்டப்படும் போது சபையின் ஊடாக நாட்டு மக்களுக்கு உரையாற்றவும் திட்டமிட்டுள்ளதாக செய்தி வெளியாகி உள்ளது.

சுமார் பத்து நாட்களுக்கு அவையை ஒத்திவைப்பது குறித்து ஜனாதிபதி ஆலோசித்து வருவதாக தகவலறிந்த வட்டாரம் தெரிவித்துள்ளது.

ஒத்திவைப்பு என்பது பாராளுமன்றத்தின் தற்காலிக இடைவேளையாகும், மேலும் இரண்டு மாதங்களுக்கு மேல் நீட்டிக்கக் கூடாது.

எவ்வாறாயினும், அத்தகைய புதிய பிரகடனத்தின் திகதியிலிருந்து மூன்று நாட்களுக்கு குறையாத திகதிக்கு அழைக்கப்பட்டால், பாராளுமன்றத்தை அழைப்பதற்கான அத்தகைய திகதி மற்றொரு ஜனாதிபதி பிரகடனத்தின் மூலம் முன்னெடுக்கப்படலாம். பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படும் போது, அரசியலமைப்பின் 70 ஆவது பிரிவின் பத்தி (3) இன் கீழ் புதிய பாராளுமன்ற கூட்டத்தொடர் தொடங்கும் திகதியை பிரகடனம் அறிவிக்க வேண்டும்.

# சமூகவலைத்தளங்களை பாவிக்க ஊழியர்களுக்குத் தடை

லங்கா மின்சார சபையின் ஊழியர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

சபையின் பொது முகாமையாளரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் ஊடாக இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

வாரியத்தின் எந்தப் பணியாளரும் எந்தக் காரணத்திற்காகவும் தனது அதிகாரபூர்வ அடையாளத்தையும் தகவலையும் சமூக ஊடகங்களுக்குப் பயன்படுத்த முடியாது.

வாரியத்தின் இரகசிய தகவல்களை வெளியிடுவது, தவறான அல்லது அரசியல் அவதூறு விடயங்களை சமூக ஊடகங்களில் வெளியிடுவது ஆகியவை ஒழுங்கு விதிகளின்படி கடுமையான குற்றமாகும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

இச்சுழற்சிக்கு முரணாக செயற்படுபவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# ஒரு தேங்காயில் இரண்டு தென்னங்கன்றுகள்



ஒரே தேங்காயில் இரு தென்னங்கன்றுகள் முளைத்த அதிசய நிகழ்வொன்று கிளிநொச்சி இயக்கச்சியில் அமைந்துள்ள ReeCha Organic Farm இல் நிகழ்ந்துள்ளது.

பொதுவாகவே தென்னங்கன்றுகளுக்கு பதியன் முறையினை எங்கள் மூதாதையர்கள் கூறிவைத்துள்ளனர். மண்ணுக்குள் புதைத்து வைத்து தென்னம்பிள்ளைகளை உருவாக்குவார்கள். ஒரு தேங்காயில் இரு தென்னம்பிள்ளைகள் முளைத்துள்ளமை பலருக்கும் வியப்பினை ஏற்படுத்தியுள்ளது.

# கொழும்பில் தொடரும் போராட்டம்

அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இலங்கை மின்சாரசபை அலுவலகத்திற்கு முன்பாக கடந்த இரண்டு நாட்களாக ஆயிரக்கணக்கானோர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இன்றும் போராட்டம் தொடர்ந்தது.

இப்போராட்டம் இன்றைய தினமும் (05) தொடரவுள்ள நிலையில் அரசாங்கத்திற்கு எதிராக 10 ஆயிரம் பேர் நாளை கொழும்பில் ஒன்று திரண்டு போராட்டத்தினை நடத்தவுள்ளதாக நேற்றைய (04.01.2024) ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.


கிருபா லேணர்ஸ்
කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS
அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.



அ.கிருபாகரன்
-அதிபர்-

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

சுன்னாகம் 021 224 2022
நெல்லியடி 021 226 0700
பருத்தித்துறை 021 226 1100
ஆவரங்கால் 021 222 6688
சித்தங்கேணி 021 225 2500
சாவகச்சேரி 021 227 0700
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
விஸ்வமடு 021 320 1515
மன்னார் 023 225 1656
கிளிநொச்சி 021 228 5505
வவுனியா 024 222 7777

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# தை பிறந்தால் வழி பிறக்கும்

**யாழ்ப்பாணத்திற்கான தனது நான்கு நாள் விஜயத்தின் போது வடமாகாணத்திற்கான பொருளாதார திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி உத்திகளை வெளியிட்டார்.**

**அனைத்து மீள்குடியேற்ற நடவடிக்கைகளையும் 2025 ஆம் ஆண்டளவில் முடிக்குமாறு அறிவுறுத்தல் வடக்கில் காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வுகாண காணி அமைச்சு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிராந்தியம் மற்றும் நாட்டின் அபிவிருத்தியில் பங்கெடுக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**

**இலங்கையில் முதலீடு செய்ய புலம்பெயர் மக்களுக்கு அழைப்பு தைப்பொங்கல் பண்டிகையின் பின்னர் அரச ஊழியர்களுக்கு பொருளாதார நிவாரணம் வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று உறுதியளித்ததுடன், நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதன் மூலம் ஒட்டுமொத்த மக்களுக்கும் பொருளாதார நிவாரண நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்படுமென சுட்டிக்காட்டினார்.**

**இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றும் பிரச்சினை தொடர முடியாது எனவும், 2025 ஆம் ஆண்டுக்குள் இடம்பெயர்ந்தவர்கள் எவரும் இருக்கக்கூடாது எனவும் தெரிவித்த அவர், இடம்பெயர்ந்த அனைவரையும் மீள்குடியேற்றுவதற்கான திட்டத்தை வகுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.**

**மீள்குடியேற்றம், கல்வி, சுகாதாரம், நிலம், கடற்றொழில், விவசாயம் மற்றும் வனப்பாதுகாப்பு போன்ற பல்வேறு முக்கிய விடயங்களில் விக்கிரமசிங்க உரையாற்றினார். வடமாகாணத்தின் அபிவிருத்திக்கான கூட்டு முயற்சிகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவர், நவீனமயமாக்கல் மூலம் அதனை ஒரு முக்கிய விவசாய மையமாக மாற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.**

**எரிசக்தி ஏற்றுமதியில் மூலோபாய கவனம் செலுத்துவதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார், பூனரினை ஒரு ஆற்றல் மையமாகக் கருதியதுடன், வடக்கில் ஆற்றல் வளங்களைப் பாதுகாப்பதற்கான திட்டங்களையும் சுட்டிக்காட்டினார்.**

**வடக்கு மாகாணத்தில் காணி விடுவிப்பை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்த விக்கிரமசிங்க, பலாலி விமான நிலையம் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு தேவையான காணி தொடர்பில் பெப்ரவரி மாதத்திற்குள் உறுதியான முடிவை எடுப்பதாக அறிவித்தார்.**

**வடக்கில் நிலவும் காணிப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணுமாறு காணி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.**

**ஜனாதிபதியின் உரையைக் கேட்கும் போது மகிழ்ச்சியாகத்தான் உள்ளது. இவை எல்லாம் நடைமுறைச் சாத்தியமா எனக் கேட்டால் இல்லை என்றே பதில் வரும். முன்னர் பதவி வகித்த ஜனாதிபதிகளும் வடக்கில் நிற்கும்போது பாலாறு, தேனாறு பாயகதை அளப்பார்கள். அந்தப் பேச்சுகளைக் கேட்டுக் கேட்டுப் புளித்து விட்டது.**

**தமிழ் மக்களின் உரிமைகளைக் கொடுப்பதற்கு ஜனாதிபதி விரும்பினாலும், அவரது அரசியல் எதிரிகள் திறம்பட காய் நகர்த்தி எல்லாவற்றையும் முறியடித்து விடுவார்கள்.**

**எல்லாவற்றையும் தேர்தல்கால பரப்புரையாகவே பார்க்க வேண்டி உள்ளது. தேர்தலில் வெற்றி பெற்றாமல் ஜனாதிபதியாகிய ரணிலுக்கு இதெல்லாம் சர்வசாதாரணம். அரசியல் அதிகாரத்தைச் சுவைக்க விரும்பும் தலைவர்கள் ஜனாதிபதித் தேர்தலை ரணிலுக்குக் கை கொடுப்பார்கள். அந்த நம்பிக்கை அவருக்கு உள்ளது. தேர்தல் நெருங்கும் சமயத்தில் இன்னும் சில தகிடுதத்தங்களைப் பார்க்க நேரிடும்.**

# 19 இலட்ச ஏலத்தில் தாவூத் இப்ராஹிமின் பரம்பரை வீடு

இந்தியாவில் தேடப்படும் குற்றவாளியும், மும்பை குண்டுவெடிப்பிற்கு காரணமான நிழல் உலக தாதாவுமான தாவூத் இப்ராஹிமின் பரம்பரை சொத்துகள் நான்கு இன்று ஏலம் விடப்படவுள்ளது.

அவரது வீட்டுக்கு 19 இலட்சத்திற்கு மட்டுமே ஏலவிலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த சொத்துகளை வாங்க விருப்பம் தெரிவித்தவர்கள் பட்டியலில் சிவசேனாவின் முன்னாள் உறுப்பினர் அஜய் ஸ்ரீவத்சவாவும் ஒருவர்.

இவர் ஏற்கெனவே 2020 இல் தாவூத் இப்ராஹிமிற்கு சொந்தமான பங்களா ஒன்றை ஏலத்தில் வாங்கி



யுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த பங்களாவில், சனாதன தர்ம பாடசாலை அமைக்க திட்டமிட்டுள்ளாராம் அஜய் ஸ்ரீவத்சவா.

கடத்தல் மற்றும் அந்நியச் செலாவணி மோசடி சட்டத்தின் கீழ், மஹாராஷ்ட்ராவிலுள்ள தாவூத் இப்ராஹிமின் சொத்துகள் அத்தனையும் அரசு கைப்பற்றி உள்ளது.

கடந்த 9 ஆண்டுகளில், தாவூதிற்கு தொடர்புடைய பங்களா, ஹோட்டல் உட்பட 11 சொத்துகள் ஏலம் விட்டுள்ளது மகாராஷ்டிரா அரசு.

# செங்கடலில் ஹூவுதிகள் அட்டகாசம்

ஹூவுதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஏமனில் இருந்து ஏவப்பட்ட ஆயுத மேந்திய ஆளில்லா படகு வியாழன் அன்று, அமெரிக்க கடற்படை மற்றும் வணிகக் கப்பல்களின் இரண்டு மைல் தூரத்திற்கு நெருங்கி சென்று வெடித்ததாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. இதில், பாதிப்பு மற்றும் உயிரிழப்புகள் ஏற்படவில்லை.

ஹூவுதிகளின் சமீபத்திய தாக்குதல், அதன் தாக்குதலுக்கு எதிரான அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஜப்பான் உள்ளிட்ட 12 நாடுகள் கூட்டு அறிக்கையை வெளியிடப்பட்டதற்கு ஒரு நாளைக்குப் பின் நிகழ்ந்துள்ளது. ஏமனின் பெரும் பகுதியைக் கட்டுப்படுத்தும் ஈரான் ஆதரவு பெற்ற ஹூவுதிகள், நவம்பர் 19 ஆம் திகதி முதல், ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவாக செங்கடலில் வர்த்தக கப்பல்களை தாக்கி வருகின்றனர். இது வர்த்தக கப்பல்கள் மேல் நடத்தப்படும் 25 ஆவது ஹூவுதி தாக்குதல் ஆகும்.

ஹூவுதிகளின் தாக்குதல் உலகில் 12% வர்த்தகம் கடந்து செல்லும் செங்கடல் கப்பல் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்துகிறது.

# 15 இந்தியர்களுடன் கடத்தப்பட்ட சரக்குக் கப்பல்

சோமாலியா கடற்கரை அருகே நேற்று மாலை 'எம் வி லிலா நார்ஃபோல்க்' என்ற சரக்குக் கப்பல் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டது. கடத்தப்பட்ட கப்பலில் 15 இந்தியர்கள் இருந்தனர்.

கடத்தப்பட்ட கப்பலை கண்காணிக்க சோமாலிய கடற்கரையை நோக்கி, இந்திய கடற்படைக்கு சொந்தமான ஐ.என்.எஸ் சென்னை போர்க்கப்பல் விரைந்துள்ளது. கடத்தப்பட்ட கப்பலில் 5-6 ஆயுதம் ஏந்திய கொள்ளையர்கள் இருக்கலாம் என்பதை உணர்த்தும் வகையில், கடத்தப்பட்ட கப்பல் UKMTO (யுனைடெட் கிங்டொம் கடல்சார் வர்த்தக நடவடிக்கைகள்) இணைய முகப்பிற்கு (Portal) தகவல் அனுப்பியதாக இந்திய இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில்



கூறப்பட்டுள்ளது.

கடத்தல் தொடர்பான விபரங்கள் மற்றும் கப்பல் யாரால் கடத்தப்பட்டது என்பது குறித்த விபரங்கள், தற்போது வரை வெளியிடப்படவில்லை.

# தென் கொரியா மீது வட கொரியா திடீர் தாக்குதல்

தென்கொரியா மீது வடகொரியா திடீர் என தாக்குதல் நடந்துள்ளதால் இன்னொரு போர் தொடங்குமா என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

தென்கொரியாவுக்கு சொந்தமான ஒரு தீவில் வடகொரியா திடீரென பீரங்கி தாக்குதல் நடத்தி உள்ளதாகவும் வடகொரியாவின் இந்த இராணுவ நடவடிக்கையால் கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது

இந்தத் தாக்குதலால் தென்கொரிய இராணுவத்திற்கு எந்த சேதமும் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதால் இந்தத் தாக்குதல் போர் பதற்றத்தை அதிகரித்து அமைதியை குலைக்கும் செயல் என்று தென்கொரிய அரசு தெரிவித்துள்ளது.

அணு ஆயுதம் தொடர்பாக அமெரிக்கா மற்றும் வடகொரியா இடையே மோதல் ஏற்பட்டு வரும் நிலையில் தென்கொரியாவுக்கு அமெரிக்கா ஆதரவளித்து வருகிறது. இந்த நிலையில் தென்கொரியா மீது வடகொரியா தாக்குதல் நடத்தி இருப்பதை அடுத்து அமெரிக்கா, தென்கொரியாவுக்கு ஆதரவாக குரல் எழுப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மரக்கறி விலை கிடுகிடு உயர்வு

நத்தார் மற்றும் புத்தாண்டு காலத்தில் அதிகரித்த மரக்கறிகள் மற்றும் மீன்களின் விலைகள் தொடர்ந்தும் வேகமாக அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு கிலோ கரட் சுமார் ஆயிரம் ரூபாவாகவும் ஒரு கிலோ பச்சை மிளகாய் மற்றும் இஞ்சி இரண்டாயிரம் ரூபாயை நெருங்குவதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் மீன் சந்தையில் மொத்த விலையும் நுகர்வோரால் தாங்க முடியாத அளவிற்கு உயர்ந்துள்ளது.

பேலியகொட மெனிங் சந்தையில் நேற்று (04) காலை மரக்கறிகளின் மொத்த விலை உயர்வாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

ஒரு கிலோ கரட் ரூ.1,000, இஞ்சி ரூ.1,900, பச்சை மிளகாய் ரூ.1,800, கறிமிளகாய் ரூ.900, தக்காளி ரூ.900, கத்தரிக்காய் ரூ.800, வெண்டைக்காய் ரூ.560 என பதிவாகியிருந்தது.

எனினும், சந்தையில் காய்கறிகளின் விலை உயர்வால் தமக்கு உரிய பலன் கிடைக்கவில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மரக்கறிகளின் விலைகள் மட்டுமன்றி மீன்களின் விலைகளும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# படகில் பிடிபட்ட 300 கிலோ போதைப்பொருள்



இலங்கைக்கு தெற்கே ஆழ்கடலில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட பல நாள் மீன்பிடி படகிலிருந்து 300 கிலோ ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 278 பொதிகளில் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் ஏற்றிச் சென்ற இலங்கையின் பல நாள் மீன்பிடி படகுடன் 06 சந்தேக நபர்களும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படை, பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்துடன் இணைந்து இலங்கையின் தெற்கே ஆழ்கடல் பகுதியில் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இந்த நடவடிக்கை நேற்று (04) இரவு மேற்கொள்ளப்பட்டு இன்று (05) காலை குறித்த படகு மற்றும் சந்தேகநபர்கள் காலி துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# 28 விமான நிலைய அதிகாரிகளுக்கு கட்டாய விடுமுறை

விமான நிலைய கூட்டு நிபுணத்துவ தொழிற்சங்க தலைவர் உட்பட 28 அதிகாரிகளை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தனியார் நிறுவனம் கட்டாய விடுமுறை வழங்கி அனுப்பியுள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சேவைகளை சீர்குலைக்கும் நோக்கத்துடன் குறித்த தொழிற்சங்கத்தின் செயலாளர் ஜனவரி 2 ஆம் திகதி இலங்கையில் விமானப் பயண சேவைகளை வழங்கும் விமான நிறுவனங்களுக்கும் சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்திற்கும் அனுப்பியதாக கூறப்படும் கடிதத்தை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது சட்ட மற்றும் தார்மீக நியாயம் இல்லாத தேவையற்ற நடவடிக்கை என்று கருதிய நிறுவனத் தலைவர், முறையான விசாரணை அடிப்படையில் குறித்த 28 பேரையும் உடனடியாக கட்டாய விடுப்பில் அனுப்பும் முடிவை செயற்படுத்தினார்.

விசாரணைகள் முடியும் வரை விமான நிலையம் மற்றும் விமான நிறுவனங்களின் எந்தவொரு வளாகத்திற்கும் இந்த அதிகாரிகள் செல்வது தடைசெய்யப்படும் என்று நிறுவனத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

# விமானப்படை தளத்தை படம் எடுத்த இளைஞன் கைது

வவுனியா விமானப் படை தளத்தை புகைப்படம் எடுத்ததாக சந்தேகத்தின் பேரில் பூனாவ பகுதியைச் சேர்ந்த பைரூஸ் பவாஹிர் என்ற இளைஞரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி விசேட விமானத்தில் வவுனியா விமானப் படை தளத்திற்கு வருகை தந்து இன்று (05.01.2024) வன்னி அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளார்.

இவ்வாறான சூழலில் பாதுகாப்பு வாகனத்தொடரணி சென்று கொண்டிருந்த நிலையில் அதனை இளைஞரொருவர் புகைப்படம் எடுத்தமையை அவதானித்த பாதுகாப்பு உத்தியோகத்தரொருவர் குறித்த இளைஞனை கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பொதுமக்களின் பணத்தை சுருட்டிய தோட்டத் தலைவர்

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொகவந்தலாவ, கெர்க்கஸ்வோல்ட் எல்பட கீழ்பிரிவு தோட்டத்திலுள்ள தொழிலாளர்களின் பணத்தினை தொழிற்சங்கத் தலைவர் ஒருவர் மோசடி செய்யப்பட்டதாக கூறி நேற்று (04) காலையிலிருந்து கெர்க்கஸ்வோல்ட் எல்பட கீழ்பிரிவு தோட்டப்பகுதியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பொகவந்தலாவ, கெர்க்கஸ்வோல்ட் மத்திய பிரிவில் உள்ள சிறீ முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எல்பட கீழ்பிரிவு தோட்ட தொழிலாளர்களின் சம்பள பணத்தில் இருந்து ஒரு இலட்சத்து 35,000 ரூபா குறித்த தொழிற்சங்க தலைவரினால் வசூல் செய்யப்பட்டதாகவும் அதில் 75,000 ரூபா பணம் மாத்திரம் கெர்க்கஸ்வோல்ட் மத்திய பிரிவு தோட்ட ஆலய நிர்வாகத்திற்கு வழங்கியுள்ளதாகவும் மிகுதிப் பணம் எங்கே என மக்கள் நேற்று காலை கேள்வி எழுப்பி போராட்டம் நடத்தினர்.

# சீமெந்து விலை அதிகரிப்பு

வட் வரி உயர்வால், சீமெந்து விலை ரூ.150 அதிகரித்து ரூ.350 ஆக உள்ளதாக சீமெந்து உற்பத்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விலை உயர்வின் மூலம் சில சீமெந்து நிறுவனங்களில் 50 கிலோ எடையுள்ள சீமெந்து மூட்டையின் விலை 2,300 ரூபாயாகவும் மற்றுமொரு நிறுவனத்தில் சீமெந்து மூட்டையின் விலை 2,450 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வரி உயர்வுக்கு முன், சில நிறுவனங்களில் சீமெந்து மூட்டையின் விலை 1,980 ரூபாயாகவும் சில நிறுவனங்களில், சீமெந்து மூட்டையின் விலை, 2,300 ரூபாயாகவும் இருந்தது.

# பாடசாலையிலிருந்து ஆயுதங்கள் மீட்பு

வத்தளையிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றின் கிரிக்கெட் பயிற்சியாளரின் அறையில் இருந்து டி 56 ரக துப்பாக்கி ஒன்றும், 04 மெகசின்கள் மற்றும் 9 MM ரக 18 தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த ஆயுதங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழு தலைவன் கனேமுல்ல சஞ்சீவிற்கு சொந்தமானது என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். பயிற்சியாளரைக் கைது செய்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மின் கட்டணத்தில் 50% தள்ளுபடி-நந்திக பத்திரகே

கடந்த ஒக்ரோபர் மாதம் 18 வீதத்தினால் அதிகரிக்கப்பட்ட சுமார் 50% மின்சாரக் கட்டணமானது கூடிய விரைவில் குறைக்கப்படும் என மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் நந்திக பத்திரகே தெரிவித்துள்ளார்.

நேற்று (04) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மூன்று மாதங்களாக தொடர் மழை பெய்து வருவதால் நீர் மின் உற்பத்தியின் இலாபத்தை மக்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தில் இலங்கை மின்சாரசபை இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார். மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கான யோசனை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரி20 உலகக்கிண்ணம் குரூப் ஆஃப் டெத். தென்னாபிரிக்கா

ரி20 உலகக்கோப்பை தொடரில் குரூப் ஏ, குரூப் பி, குரூப் சி மற்றும் குரூப் டி உள்ளிட்ட 4 பிரிவுகளிலும் எந்தெந்த அணிகள் இடம்பெற்றுள்ளது என்ற விபரங்கள் வெளி வந்துள்ளது. நடப்பாண்டில் ஜூன் மாதம் ரி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் அமெரிக்கா, மேற்கு இந்தியா ஆகிய நாடுகளில் நடக்கவுள்ளது. மொத்தமாக 20 அணிகள் பங்கேற்கும் இந்த ரி20 உலகக்கோப்பை தொடரில், ஒவ்வொரு குரூப்பிலும் 5 அணிகளாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடக்கவுள்ளது. இதில் ஒவ்வொரு குரூப்பிலும் டாப் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் சூப்பர் 8 சுற்றுக்கு தகுதி பெறும்.




சூப்பர்8 சுற்றுப் போட்டிகளும் இரண்டு குரூப்களாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்படும். அதில் டாப் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதி சுற்றுக்கு தகுதி பெறும். அதன்பின் இறுதிப் போட்டி நடக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஜூன் 4 ஆம் திகதி தொடங்கும் ரி20 உலகக் கோப்பைத் தொடர், ஜூன் 30 ஆம் திகதி இறுதிப் போட்டி நடக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குரூப் ஏ பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா, கனடா, அயர்லாந்து. குரூப் பி பிரிவில் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நமீபியா, ஸ்கொட்லாந்து, ஓமன். குரூப் சி பிரிவில் நியூஸ்லாந்து, மேற்கு இந்தியா, ஆஃப்கானிஸ்தான், உகாண்டா, பப்புவா நியூகினியா. குரூப் டி பிரிவில் தென்னாபிரிக்கா, இலங்கை, பங்களாதேஷ், நெதர்லாந்து, நேபாளம். இதில் குரூப் ஏ குரூப் பி பிரிவில் இடம் பெற்றுள்ள உச்ச அணிகள் எளிதாக சூப்பர் 8 சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பு இருப்பதாக பார்க்கப்படுகிறது. ஆனால் குரூப் சியில் 3 நட்சத்திர அணிகள் இடம் பிடித்துள்ளதால், எந்த அணி சூப்பர் 8 சுற்றுக்கு முன்னேறும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. அதே போல் குரூப் டி பிரிவில் 5 அணிகளும் பலம் வாய்ந்த அணிகளாக உள்ளது. ஏனென்றால் கடந்த ரி 20, உலகக் கோப்பையில் தென்னாபிரிக்கா அணியை நெதர்லாந்து வீழ்த்தியுள்ளது. அதேபோல் பங்களாதேஷூம் எந்த நேரத்திலும் எந்த அணியையும் வீழ்த்தும் வல்லமை இருப்பதால், குரூப் டி தான் குரூப் ஆஃப் டெத் என்று பார்க்கப்படுகிறது.

# ஸ்போர்ட்ஸ்டார் ஏசஸ் 2024 விருதுக்கு கோலி பரிந்துரை

ஸ்போர்ட்ஸ்டார் ஏ.சி. இ.எஸ் விருதுகள் 2024 இற்கான 'பாப்புலர் சாய்ஸ் - ஸ்போர்ட்ஸ்டார் ஆஃப் தி இயர் (ஆண்)' விருதுக்கு விராட் கோலி பரிந்துரைக்கப்பட்டார் .

2023 இல் கோலி அதிக ஒருநாள் சதங்கள் அடித்த மைல்கல்லைக் கடந்தார்.

ஆசிய கோப்பையின் போது கே.எல்.ராகுலுடன் ஆட்டமிழக்காமல் 233 ஓட்டங்கள் எடுத்தது போட்டி வரலாற்றில் அதிகபட்ச பார்ட்னர்ஷிப்பாகும்.

ஒருநாள் போட்டிகளில் அதிவேகமாக 13,000 ஓட்டங்களைக் கடந்த வீரர் என்ற பெருமையைப் பெற்றார். ஒரு காலண்டர் ஆண்டில் 1000 இற்கும் மேற்பட்ட ஓட்டங்களை எட்டாவது முறையாக, ஏழு முறை செய்த சச்சின் டெண்டுல்கரை முந்தினார்.

உலகக் கோப்பையின் ஒரே பதிப்பில் 700 ஓட்டங்களுக்கு மேல் எடுத்த ஒரே பேட்டர் ஆனார். இந்த ஆண்டு 21 வகை விருதுகள் உள்ளன, ஐந்து பிரபலமான தேர்வு மற்றும் 16 ஜூரி விருதுகள். ஐந்து பிரபலமான தேர்வு விருதுகள் 'ஆண்டின் விளையாட்டு நட்சத்திரம் (ஆண்)', 'ஆண்டின் சிறந்த விளையாட்டு நட்சத்திரம் (பெண்)', 'ஆண்டின் தேசிய அணி', 'ஆண்டின் கிளப்/ மாநில அணி' மற்றும் 'ஆண்டின் தருணம்' ஜூரி விருதுகள் ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர் (தனிப்பட்ட விளையாட்டு, தடம் மற்றும் களம், குழு விளையாட்டு, பாராஸ் போர்ட்ஸ்), ஆண்டின் சிறந்த விளையாட்டு பெண் (தனிப்பட்ட விளையாட்டு, குழு விளையாட்டு, தடம் மற்றும் களம், பாராஸ்போர்ட்ஸ்), ஆண்டின் சிறந்த பயிற்சியாளர், ஊக்குவிப்புக்கான சிறந்த மாநிலம் விளையாட்டு, விளையாட்டை மேம்படுத்துவதற்கான சிறந்த கார்ப்பரேட், விளையாட்டை மேம்படுத்துவதற்கான சிறந்த பொதுத்துறை நிறுவனம், விளையாட்டை மேம்படுத்துவதற்கான சிறந்த கல்லூரி/ பல்கலைக்கழகம், வாழ்நாள் சாதனையாளர் விருது, ஆண்டின் இளம் சாதனையாளர் (சிறுவன்), ஆண்டின் இளம் சாதனையாளர் (பெண்) சமூக நலனுக்கான விளையாட்டுக்கான தனித் தலைவர் விருதும் வழங்கப்படும்,

இது நமது உலகத்தைச் சிறந்த இடமாக மாற்றுவதற்கு விளையாட்டின் சக்தியைப் பயன்படுத்திய தனிநபர்கள் அல்லது நிறுவனங்களை கௌரவிக்கும்.



# 100 ஆவது ஆண்டில் ஆர்ஜென்ரீனா ஒலிம்பிக்




ஆர்ஜென்ரீனா ஒலிம்பிக் கமிட்டி 1924 ஆம் ஆண்டு பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கான கட்டமைப்பை உருவாக்க 1923 ஆம் ஆண்டில் ஜனாதிபதி மார்செலோ டோர்குவாடோ டி அல்வேரின் ஆணையால் நிறுவப்பட்டதன் மூலம் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி அதன் நூற்றாண்டு விழாவைக் குறித்தது.

ஆர்ஜென்ரீனா ஒலிம்பிக் கமிட்டி (CXM) அதன் 100 ஆவது ஆண்டு விழாவை கடந்த ஞாயிற்றுக்கிழமை கொண்டாடியது, இது 1923 இல் மார்செலோ டி. டி அல்வேரால் ஜனாதிபதி ஆணையால் உருவாக்கப்பட்டது.

1924 பாரிஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்று, ஒரு தங்கம், மூன்று வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது. வரலாறு ஒருபுறம் இருக்க, வரலாற்றில் முதல் பான் அமெரிக்கன் விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் புவெனஸ் அயர்ஸை உள்ளடக்கிய நீண்ட பயணத்திற்குப் பிறகு, ஆர்ஜென்ரீனா ஒலிம்பிக் கமிட்டி அதன் நூற்றாண்டு விழாவில் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் பெற்றது. இந்தக் கொண்டாட்டங்கள் விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள், அதிகாரிகள், அனுசரணையாளர்கள் பத்திரிகையாளர்கள், நாட்டின் விளையாட்டுத் துறையில் மிகமுக்கிய மானவர்கள் இணைந்து கொண்டாடினர்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 05.01.2024 அன்று வெளியிடப்பட்டது.